**வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 - 2013**

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) சீன அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பிற்கும் (சீடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 மார்ச் 31 ஆந் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் கீழ் இந்தச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 2 இன் கடன் வசதி உடன்படிக்கையின்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் உத்தேசிக்கப்பட்ட 589.9 கிலோமீற்றர் முன்னுரிமைப்படுத்திய வீதிகளை முன்னேற்றுதல் மற்றும் புனரமைப்பு செய்வது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் வசதி உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 556 மில்லியனானதுடன் அதில் ரூபா 55,250 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் அல்லது 90 சதவீதம் சீன அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பினால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 யூன் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது

கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்டத்தின் தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

-----------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 23,557 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 52,902 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | (15,951) | 147,064 | 133,723 |
| நடைபெறும் வேலைகள் | 32,318,424,335 | 16,100,660,630 | 48,851,211,645 |
| | 32,318,408,384 | 16,100,807,694 | 48,851,345,368 |

## 5. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| சீன அபிவிருத்தி வங்கி | 500 | 55,250** | 10,830 | 108.30 | 10,830 | 300.60 | 30,060 | 54.40 |
| இலங்கை அரசாங்கம் | - | 6,188 | 1,850 | 18.49 | 1,849 | 43.30 | 4,330 | 69.97 |
| | 500 | 61,438 | 12,680 | 126.79 | *12,679 | 343.90 | *34,390 | |

* ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டியவைகள், பிடிகாசு மற்றும் கோரப்பட வேண்டியுள்ள உள்ளக நடைமுறை கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் என்பன உள்ளடக்கப்பட்டிராமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்த இந்தத் தொகை வித்தியாசப்படுகிறது.

** 2011 மார்ச் 31 இல் நிலவிய ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூபா 110.5 வீதத்தில் உடன்பட்ட கடன் தொகை மாற்றப்பட்டிருந்தது.

## 5.2. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 4.4 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர்கள் வீதி புனரமைப்பு வேலைகளிற்கான உப ஒப்பந்தகாரர்களை அமர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர்கள் ரூபா 7,275 மில்லியன் பெறுமதியான மூன்று ஒப்பந்தங்களின் கீழ் உப ஒப்பந்தகாரர்களை ஈடுபடுத்தயிருந்தனர் மேலும், உப ஒப்பந்தகாரர்கள் ஆலோசனையாளர்களின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், ஒப்பந்தகாரர்கள் மாதாந்த வேலைகளை பூர்த்திசெய்வதற்கு இயலக்கூடியவாறு போதிய மனித மற்றும் ஏனைய வளங்களை ஈடுபடுத்தியிருக்கவில்லை. இதன் விளைவாக, பல வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மெதுவான முன்னேற்றமாக கீழே குறிப்பிடப்பட்டவாறு காட்டப்பட்டிருந்தது.

| வீதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கு | உள்ளபடியான முன்னேற்றம் | விலகல்கள் |
|---|---|---|---|
| | % | % | % |
| கொரவெல - பெலவத்தை- பிட்டிகல வீதி (சீஐஏ) | 100 | 64.20 | 35.8 |
| கொரண- அங்குருவத்தோட்டை அழுத்கம வீதி (சீ4) | 100 | 71.30 | 28.7 |
| கொரவெல- பெலவத்தை- பிட்டிகல வீதி (சீ4சீ) | 100 | 82.71 | 17.29 |
| திருவானகெட்டிய- அகலவத்தை வீதியின் பாலங்களின் புனர்நிர்மாணம் (சீ21) | 100 | 63.56 | 36.44 |
| நாகொடை- கலவெல்லாவ- பெல்லப்பிட்டிய வீதி (சீ20)) | 89.38 | 58.36 | 31.02 |
| பதுளை- கரமெட்டிய- அண்டல்பொத்த வீதி (சீ2பீ) | 100 | 81.36 | 18.64 |
| தென்னகும்புர- றிகிலகஸ்கட - ராகல வீதி (சீ11) | 73.80 | 54.67 | 19.13 |
| நுவரவில் மாகாண வீதிகள் - நுவரெலியா மாவட்டம்(சீ17) | 95.13 | 72 | 23.13 |

**5.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்கமுவ – அநுராதபுரம் வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் பிரகாரம், வேலையின் நோக்கெல்லை குறிப்பிடத்தக்களவு மாற்றப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஆரம்ப அளவீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட வீதி புனரமைப்பு வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மொத்த அடிப்படை போக்கு மற்றும் உப அடிப்படை போக்கின் அளவுகள் முறையே 15 சதவீதம் மற்றும் 500 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், ரூபா 99,348,518 பெறுமதியான கால்வாய், நடைபாதை, விளிம்புகள் போன்றவற்றின் புனரமைப்பு வேலைகள் 2013 செப்தெம்பர் 12 இல் பட்டடியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 8.3 ஆம் உட்பிரிவின் பிரகாரம், வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஏதாவது தாமதங்கள் ஏற்படுவதற்கு திருத்திய நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிப்பதற்கு ஒப்பந்தகாரர் வேண்டப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், திருவானகெட்டிய-அகலவத்தை வீதியின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 47 சதவீத மெதுவான முன்னேற்றம் புனரமைப்பு வேலைகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அத்தகைய திருத்திய நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரர் புனரமைப்பு வேலைகளிற்கான சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்துடன் பின்பற்றப்பட்டிருக்காததுடன் அப்பகுதியின் வீதி பாவனையாளர்கள் மற்றும் வசிப்போர் திட்டமிடப்படாத வீதிப் புனரமைப்பு வேலைகள் காரணமாக எழுந்த இடையூறுகளில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மேலும், பதுரளியா பொலிஸ் நிலைய தலைமை உத்தியோகத்தர் குறைவான வீதிப் பராமரிப்பு மற்றும் வீதிச் சமிஞ்சைகள் இன்மை போன்றன காரணமாக பல விபத்துக்கள் நிகழ்ந்திருந்ததென 2013 சனவரி 15 ஆந் திகதிய அவருடைய கடிதத்தில் அறிவித்திருந்தார்.

(இ) உஸ்வத்தகெய்யவ- எப்பமுள்ள- பமுனுகம வீதியின் புனரமைப்பிற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,490,000,000 ஆக இருந்ததுடன் அத்தகைய புனரமைப்பு வேலைகள் ரூபா 1,250,000,000 கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழு 8.3 நீளமான நீர்கொழும்பு –கிருல்ல வீதியின் புனரமைப்பிற்கு ரூபா 240,000,000 சேமிப்புக்களைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நீர்கொழும்பு –கிருல்ல வீதியின் புனரமைப்பு உஸ்வத்தகெய்யவ- எப்பமுள்ள- பமுனுகம வீதியின் புனரமைப்பின் முரணாக கருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர்கொழும்பு –கிருல்ல வீதி வடமேற்கு மாகாணத்தில் உள்ளதுடன் மேற்குறிப்பிட்ட வீதிக்கு இணைக்கப்பட்டிருக்கவிலலை.

(ii) நீர்கொழும்பு –கிருல்ல வீதியின் புனரமைப்புக்கான ஒப்பந்தம் கேள்வி கோரல்கள் இல்லாமல் ரூபா 277,910,000 கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 351,915,000 செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், புனரமைப்பு வேலைகள் 2013 செப்தெம்பர் 30 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதிப் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம் 65.65 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(iii) ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட நியமதரமற்ற வேலைகளை திருத்துவதில் அள்ளுகின்ற மணல் மீதான சுத்திகரிப்பிற்காக செயற்திட்டத்தால் ரூபா 12,694,500 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குறைபாடுள்ள மட்டமில் இயந்திரத்ததை பயன்படுத்தி பிபிலே- உரேனிய – மஹியங்கனை வீதியின் 219+800 கிலோமீற்றர் முதல் 32+390 கிலோமீற்றர் வரை அஸ்பற் கொங்றீட் இடப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக, வீதி மதிப்பு பாதுகாப்பற்ற மற்றும் அசௌகரியமுள்ளதாக இருந்தது. ஆலோசனையாளர் அஸ்பற் இடலை அகற்றுவதற்கும் குறைபாடுகளை திருத்துவதற்கும் ஒப்பந்தகாரரை அறிவுறுத்தியிருந்த போதிலும் 2014 யூன் 30 வரையும் இது செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.4 மனித வள முகாமைத்துவம்

2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 04 ஆலோசனையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 900,000 கூட்டு மொத்தத் தொகையான வேதனங்கள் மற்றும் ரூபா 1,920,000 கூட்டு மொத்தத் தொகையான பிரயாணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்திற்கு அவர்களுடைய பங்களிப்பை மதிப்பிடுவதற்கு இயலக்கூடியவாறு செயலாற்றல் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருகவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 322,326 கூட்டு மொத்தத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரால் செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.